சட்டத்தை அறிந்துகொள்வோம் ! பெண்களுக்கு பாதுகாப்பு அளிப்போம்!

# Resource Centre for Participatory Development Studies (RCPDS)

Kethanaickenpatty villaku,
Narikudi Road, Thiruchuli, Virudhunagar District

## குழந்தைகள் மற்றும் பெண்களின் பாலியல் பாதுகாப்பு குறித்து
## இந்திய தண்டனைச் சட்டம் என்ன சொல்லுது ?

பாலியல் பலாத்கார குற்றத்துக்கான தண்டனையை கடுமையாக்கும் வகையில் குற்றவியல் சட்டம் (திருத்தம்) மசோதா–2013 ஐ நாடாளுமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்தது. இதற்கு கடந்த மார்ச் மாதம் 19 ம் தேதி மக்களவையும் மார்ச் 21 ம் தேதி மாநிலங்களவையும் ஒப்புதல் அளித்துள்ளன. இச் சட்டத்திருத்ததிற்கு ஜனாதிபதி அவர்களும் ஒப்புதல் அளித்து கையெழுத்திட்டுள்ளார். இதன் கீழ் இந்திய தண்டனை சட்டம், குற்றவியல் நடைமுறை சட்டம், இந்திய சாட்சிகள் சட்டம், பாலியல் குற்றங்களில் இருந்து சிறுவர்களை காக்கும் சட்டம் ஆகியவை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

## " குற்றவியல் சட்டம் [திருத்தம்] -2013"
## முக்கிய அம்சங்கள்

| குற்றசெயல்கள் | தண்டனை |
|---|---|
| ஆசிட் வீச்சு | குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் அதிகபட்சம் ஆயுள் சிறை மற்றும் அபராதம் |
| பாலியல் தொல்லை | 3 ஆண்டுகள் வரை கடுங்காவல். |
| பெண்ணை நிர்வாணமாக்க முயற்சி | 3 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரை சிறை |
| பெண்ணின் அந்தரங்கத்தை போட்டோ எடுத்து வெளியிடுதல் | முதல் முறை செய்த குற்றத்துக்கு குறைந்தது ஓராண்டு முதல் அதிகபட்சமாக 3 ஆண்டுகள் வரை சிறை. மீண்டும் அதே குற்றத்தை செய்தால் குறைந்தபட்சமாக 3 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் சிறை தண்டனை. |
| பெண்ணை பின்தொடர்தல் | முதல்முறை செய்த குற்றத்துக்கு 3 ஆண்டுகள் வரை சிறை, மீண்டும் அதே குற்றத்தை செய்தால் 5 ஆண்டுகள் சிறை தண்டனை. |

| | |
|---|---|
| பாலியல் பலாத்காரம் | குறைந்த பட்சம் 7 ஆண்டுகள் முதல் ஆயுள் சிறைதண்டனை |
| பலாத்கார கொலை அல்லது பாதிக்கப்பட்ட பெண் கோமா நிலையில் இருப்பது | குறைந்தபட்சம் 20 ஆண்டுகள் கடுங்காவல் அல்லது வாழ்நாள் முழுவதும் சிறை தண்டனை அல்லது மரணதண்டனை. |
| கும்பலாக பலாத்காரம் | குறைந்தபட்சம் 20 ஆண்டுகள் கடுங்காவல் அல்லது வாழ்நாள் முழுவதும் சிறை தண்டனை |
| பிரிந்து வாழும் மனைவியுடன் அவரது விருப்பமின்றி பாலுறவு கொள்ளுதல். | குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் சிறை அதிகபட்சமாக 7 ஆண்டுகள் சிறை. |

- எதிரிகளால் ஆபத்து ஏற்படும் பட்சத்தில் தற்காப்புக்காக கொலை செய்யும் உரிமையும் பாதிக்கப்படுபவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- ஆசிட் வீச்சு அல்லது பாலியல் பலாத்காரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனைத்து மருத்துவமனைகளும் உடனடியாக முதலுதவி அல்லது சிகிச்சையை இலவசமாக அளிக்கவேண்டும். இதை செய்யத்தவறும் மருத்துவமனைகளுக்கு கடுமையான தண்டனை அளிக்கப்படும்.

- குற்றத்தில் ஈடுபட்டவர்கள் போலீஸ் அதிகாரி, அரசு ஊழியர், பாதுகாப்பு படை வீரர்கள், அலுவலக நிர்வாகிகள் அல்லது மருத்துவமனை ஊழியர்களாக இருந்தால் அவர்களுக்கு குறைந்தபட்சம் 7 ஆண்டுகளும், அதிகபட்சமாக சாகும்வரை சிறை தண்டனையும் அளிக்கப்படும்.

- பலாத்காரத்தால் பாதிக்கப்படும் பெண்கள் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ மன அளவிலோ, உடல் அளவிலோ செயல் இழந்தால், மொழி பெயர்ப்பாளர்கள் அல்லது சிறப்பு நிபுணர்களின் உதவி மூலம் அவர்களின் வாக்குமுலத்தை நீதிபதி பதிவு செய்யும் வகையில் ,இந்திய சாட்சிகள் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதை வீடியோ மூலம் பதிவு செய்ய வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை எதிர்ப்போம்**
**மனித மாண்புகளை கடைப்பிடித்து பாலியல் பாதுகாப்பு அளிப்போம்**

Source: Dinakaren Daily tamil newspaper-04.04.2013